# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 11,637 — 1959 ජනවාරි 9 වැනි සිකුරාදා — 9.1.1959

11,637 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு தை மாதம் 9 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV — உள்ளூர் ஆட்சி

### நானாவித அறிவித்தல்கள்

**கோறளை தெற்கு கிராமச் சங்கம்**

**இறைச்சிக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்**

இறைச்சிக்காரர்பற்றிய 1947 ம் ஆண்டின் 44 ம் இலக்கத் திருத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன்பின் குறிப்பிடும் அட்டவணையில் காண்போரிடமிருந்து 1959 ம் ஆண்டிற்கு "புச்சர் லைசென்ஸ்" தரும்படி விண்ணப்பம் கிடைத்திருக்கின்றது.

இந்தக் கிராமச் சங்க இடப்பரப்பில வசிப்போர் எவரேனும், "லைசென்ஸ்" கொடுப்பதை மறுக்க விரும்பினால், மறுப்புக்கான காரணங்களை இக்கெசெற்றின் திகதியிலிருந்து 14 நாட்களுக்கிடையில் இணைப்பிரதிகளாக எமக்கனுப்பி வைக்கும்படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அட்டவணை

| விண்ணப்பக்காரரின் பெயர் | வியாபாரம் செய்யுமிடம் |
|---|---|
| ம. த. செய்யது முகம்மது, முறக்கட்டாஞ்சேனை. | வாரத்திற்கு இரு முறை கிரானிலிருந்து, ஏறாவூர் வரை ஆட்டிறைச்சி கொண்டு திரிந்து வியாபாரம் செய்தல். |

ம. காத்தமுத்து,
கி. ச. அக்கிராசனர்,
கோறளை தெற்கு.

கி. ச. காரியாலயம்,
கிரான், முறக்கட்டாஞ்சேனை,
1958 ம் ௵ மார்கழி ௴ 23 ந் உ.

### விளம்பரம்

1959 ம் ஆண்டு தை (ஜனுவரி) மாதம் 14 ந் திகதி புதன்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக விருப்பதனை முன்னிட்டு, 1959 ம் ஆண்டு தை (ஜனுவரி) மாதம் 16 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1959 ம் ஆண்டு தை (ஜனுவரி) மாதம் 12 ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்து சேரவேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

பேர்னார்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1958 ம் ௵ மார்கழி (டிசெம்பர்) ௴ 27 ந் உ.